# விடுமுறை நாள்கள்: காலை 7 முதல் இரவு 9 மணி வரை 10 நிமிஷ இடைவெளியில் மெட்ரோ ரயில்

சென்னை, ஜூன் 25: விடுமுறை நாள்களில் காலை 7 முதல் இரவு 9 மணி வரையில் 10 நிமிஷ இடைவெளியில் மெட்ரோ ரயில்கள் இயக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கரோனா பொதுமுடக்கத்தில் இருந்து தமிழக அரசு அறிவித்துள்ள தளர்வுகளைத் தொடர்ந்து, சென்னை மெட்ரோ ரயில் சேவைகள் கடந்த 21-ஆம் தேதி முதல் மீண்டும் தொடங்கியது.

கரோனா பரவலைத் தடுக்கும் வகையில் மெட்ரோ ரயில்களில் 50 சதவீத இருக்கைகளில் மட்டும் பயணிகள் பயணிக்க அனுமதிக்கப்படுகிறார்கள். மேலும் மறு உத்தரவு வரும் வரை, ஜூன் 27 முதல் அனைத்து ஞாயிற்றுக்கிழமை மற்றும் அரசு பொது விடுமுறை நாள்களில், காலை 7 முதல் இரவு 9 மணி வரை ஒவ்வொரு 10 நிமிஷ இடைவெளியில் மெட்ரோ ரயில்கள் இயக்கப்பட உள்ளன.

இதற்கிடையே ஜூன் 21 முதல் வியாழக்கிழமை வரை முகக் கவசம் அணியாமல் அல்லது சரியாக அணியாமல் பயணம் செய்த 13 பயணிகளிடம் இருந்து ரூ.2,600 அபராதமாக வசூலிக்கப்பட்டுள்ளது என மெட்ரோ ரயில் நிறுவனம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.